**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண்.23/2022</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **19.01.2026** |
| **பெயர்** | **<u>ஹரிதாஸ்</u>** |
| **த/பெ** | **தேவராஜ்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 4.40 பி.எம்.**

**<u>1 முதல் 4 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

26. இந்த வழக்கு சொத்தில் ராஜாமணி என்பவரிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்தின் பட்டாவை தாக்கல் செய்ய இயலாது என்றும் தற்போது எனக்கு தெரியாது என்றும் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். வீட்டில் தேடி பார்த்தேன், அந்த பட்டா என்னிடம் தான் உள்ளது. அந்த பட்டா 511/13 அல்லது 511/14 என்றால் 511/14. அதன் பட்டா எண் என்ன என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த பட்டாவிற்கான சொத்தினை 2007 ல் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். என் பெயரில் எப்பொழுது பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் நானும் ராஜாமணியும் சேர்ந்து 2 ம் வாதி என் மனைவி கோமதிக்கு கிரையம் செய்த பிறகு 2019 ல் கோமதி பெயரில் மாற்றம் செய்யப்பட்டது. கோமதி பெயாில் உள்ள பட்டாவில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ராஜாமணி பெயரில் உள்ள பட்டாவினை இந்த வழக்கில் தாக்கல் செய்தால் உண்மை வெளிவந்துவிடும் என்ற காரணத்தினால் வேண்டுமென்றே தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் வீட்டில் கண்ட ராஜாமணி பெயரில் உள்ள பட்டாவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் நீதிமன்றத்திற்கு தேவைப்பட்டால் சமர்பிக்க முடியும்.

27. அந்த பட்டாவினை பத்திரம் செய்யும் பொழுது பார்க்கவில்லை

என்றால் வழக்கறிஞர் தான் பத்திரம் செய்ய உதவினார். நான் குறிப்பிடும் சர்வே எண் மற்றும் பட்டா எண் பி அட்டவணை சொத்தினை குறித்து மட்டும் தான் என்றால் சரிதான். 7 அட்டவணை சொத்து குறித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த 7 அட்டவணை சொத்திற்கும் தனித்தனியாக 7 நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் (சட்டத்திற்கு புறம்பாக) என்றால் தெரியாது. எனது தந்தை சொத்தினையும் இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் எனது தந்தைக்கு அடுத்து நான் தான் வாரிசு அதன் அடிப்படையில் எனக்கு வந்து சேர்ந்தது. எனது தந்தையின் சொத்து என்பதனால் எனது சகோதரிக்கும் எனது தாயாருக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான். அது எங்களுக்குள் நாங்கள் பேசிக்கொண்டோம். அரசாங்க அதிகாரிகளை வழக்கு சொத்தில் தலையிடக்கூடாது என்றும் சட்டத்திற்கு புறம்பாக பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆகையால் நான் கோரும் பரிகாரம் நீதிமன்றத்தால் வழங்க இயலாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் வழியாகத்தான் பிரதிவாதிகள் இன்றளவும் அவர்கள் இடத்திற்கு சென்று வருகிறார்கள் என்றால் 511/12 ன் வழியாகத்தான் பிரதிவாதிகள் பொது வழியாக பயன்படுத்தி வருகிறார்கள். நான் தாக்கல் செய்துள்ள 7 அட்டவணை சொத்துக்களும் அரை, கால், முக்கால், ஒன்று, இரண்டு, இரண்டே முக்கால் செண்ட் வீதம் தான் உள்ளது என்றால் சதுர மீட்டரில் தான் உள்ளது. அதனால் இவ்வழக்கு என் வழக்குரையாலேயே நிலைக்கத்தக்க தல்ல என்றும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 5.00 பி.எம்.**